# விஸ்வஜோதி

வைகாசி 1987



இலங்கை விஸ்வகர்ம சங்க வெளியீடு

தனிப்பட்ட விநியோகத்துக்கு மட்டும்


**VISVAJOTHY – Published by**

**the CEYLON VISVAKARMA SANGAM**

**- For Private Circulation Only -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஸ்வகர்ம சமூக ஐவர்ண அனுமக் கொடி




| | மனு | மய | துவஷ்டா | சில்பி | விஸ்வக்ஞ |
|---|---|---|---|---|---|
| கோத்திரம் | — சானகரிஷி | சனாதனரிஷி | அபுவனரிஷி | பிரத்னசரிஷி | ஸுபர்ணரிஷி |
| சாகை | — இருக்கு | யஜுர் | சாமம் | அதர்வனம் | பிரணவம் |
| மூர்த்தி | — ருத்திரன் | விஷ்ணு | பிரம்மா | இந்திரன் | சூரியன் |
| பிரவரம் | — சத்யோஜாதம் | வாமதேவம் | அகோரம் | தத்புருஷம் | ஈசானம் |
| திசை | — கிழக்கு | தெற்கு | மேற்கு | வடக்கு | ஆகாயம் |
| தண்டம் | — இரும்பு | மரம் | உலோகம் | கல் | பொன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வபிரமனே நம

# விஸ்வஜோதி

தீபம் 1 சுடர் 2

## விசுவகர்மர்

— யோகி சுத்தானந்த பாரதியார் —

உலகையெங்கள் உளிசெதுக்கும் கோயிலென்போமே — அதை
உருவையெங்கள் மனதிலுள்ள கனவ தென்போமே
சலவைக்கல்லில் கலைமணக்கும் சிலையமைப்போமே — ஒரு
சடமரத்தின் வாழ்வினுக்கும் உயிரளிப்போமே

எளியவர்க்கும் செல்வருக்கும் வீடமைப்போமே
எல்லவரும் வாழுகின்ற நாடமைப்போமே
உளங்குவிந்து கடவுள்வழி பாடுகள் செய்ய
ஓங்கிவளர் கோயில்களை ஒளிரச்செய் வோமே

தச்சர் கொல்லர் தட்டா ரென்பர் தரணி மாந்தரே
தளர்வரிய கருமவீரப் புலவர் நாங்களே
உச்சமா மலைவிளக்கும் எங்கள் விளக்கே — இசை
ஓங்கு நாட்டுக் கொடியும் நாங்கள் தாங்கும் வெற்றியே

அறுசமயக் கோயி லெங்கே அறிநிலை யெங்கே
அறிவுடனே தொழில் வளர்க்கும் ஆலய மெங்கே
விறுவிறுப்பாய்க் கலைவளரும் வித்து வானெங்கே
வேகப் பொறிகள் எங்கே யெங்கள் வேலை யில்லையேல்

அயனுலகை அமைத்தவர்கள் விசுவகர்மாக்கள்
அழகுக் கலையை வளர்ப்பவர்கள் விசுவகர்மாக்கள்
வியனுலகை இலகுவிப்போர் விசுவ கர்மாக்கள்
விசுவகரும வீரர் நீடு வாழ்கவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச கம்மாளர்களும் அவர்களின் சிறப்பும்

இந்த உலகில் ஆதியில் பரப்பிரம்மம் எனும் சக்தி தோன்றியது. அந்த சக்தியில் இவ்வுலகின் கைங்கரியங்களை நிறைவு செய்வதற்காக அந்த பிரம்மமாகிய விஸ்வபிரம்மத்தின் ஐந்து முகங்களான ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் எனும் பரப்பிரம்ம தோற்றங்களில் முறையே மனு, மய, துவஷ்டா, சிற்பி, விஸ்வக்ய எனும் ஐந்து ரிஷிகள் தோன்றினர். முறையே உலகின் ஆதி தொழில்களாகிய இரும்பு வேலை, தச்ச வேலை, கன்னர வேலை, கல் வேலை, தங்க வேலை ஆகிய ஐந்தொழில்கள் இவர்கள்பால் தோன்றின. இந்த ஐந்து ரிஷிகளிடமிருந்து சானக, சனதன, அபுவன, பிரத்தியட்ச, சுவர்ண என ஐந்து ரிஷிகள் தோன்றினர். இந்த ஐந்து ரிஷிகளினதும் கோத்திரங்களே மேற் குறித்த ஐந்தொழிலுமாம். உலகின் பல சிறப்பிற்கும், நாகரிக வளர்ச்சிக்கும் கலைகளின் மங்காத புகழுக்கும் மூலகர்த்தாக்கள் இந்த பஞ்ச கம்மாளர்களே.

'ஏர் எழுபது' என்கின்ற நூலையெழுதி உழவு தொழிலின் சிறப்பை உலகிற்கு எடுத்துக்காட்ட வந்த கவிச்சக்கரவர்த்தி கம்பன் அந்நூலில் ஒரு பாடலில் மிகத்தெட்டத் தெளிவாக ''காராளர் திறனெல்லாம் கம்மாளர் கைத்தொழிலாலே'' என எடுத்துக் காட்டியுள்ளார். உழவர்களின் மிகப் பிரதானமான ''மேழி'' இந்தக் கம்மாளரின் கைத் தொழிலாக உருவாக்கப்படுகின்றது. இதேபோல் இவர்களின் சிறப்பைக் கூறவந்த ஒப்பிலா மணிப்புலவர் பெருந்தலைச் சாத்தனுர் மாந்தையிலே வாழும் மகிடத்தியாகி யென விழித்துள்ளார். இவர்களைப் போலவே ஔவைப்பிராட்டியாரும் ''அம்மாள் மகளை அடி யென்றால் சீ என்பாள், கம்மாளன் தாலி கழுத்திலேறின்'' என்று கம்மாளனின் புகழை விழிக்கின்றார் இதேபோல் பட்டினத்தடிகளும் தனதொரு பாடலினால் ''அத்திசைமுகனால் மாந்தைக் கம்மாளன் வகுத்த வகுப்பொழிய குருநாதரைக் கண்டிலரே இக்குவலயத்தே'' இப்படி பல் சிறப்புகளாலும் சிறந்த ஓர் இனம் நம் இனம்.

மன்னர் முதல் சாதாரண மனிதன்வரை மகுடமிருந்து சிறிய நகைவரைக்கும் செய்து அழகூட்டியவன் இந்த இனத்தவன் தஞ்சை பெருவுடையாள் கோயில் அமைக்கும் வேளையில் அங்கிருந்த ஆஸ்தான சிற்பிக்கு பெருமன்னனும் பெருமைசேர் புகழேந்தியாம் ராஜராஜ சோழனே எச்சுப்படிக்கம் தூக்கினான் என்றால் இந்த இனத்தின் பெருமையை யார் கூறவல்லர்? இத்தகைய இனத்தில் மாமுனிவர்களிலிருந்து பெரும் ரிஷிகள், ஒப்பற்ற புலவர்கள், கலைவல்லுனர்கள் ஆகியோரைத் தோற்றுவித்த இந்த பெருமை இந்த இனத்தையே சாரும். விஸ்வகர்மா எனும் சொல்லினுடைய ''விஷ்வம்'' என்பது உலகவியாபகம் உலகிற்பரந்து காரியமாற்றுபவன் என்று பொருள்படும். இத்தகைய உயர்ந்த தவமுடைய இனத்தில் நாங்கள் பிறப்பதற்கு பூர்வ புண்ணியம் செய்திருத்தல் வேண்டும்.

சித்தாந்த ஆய்வாளர், ஆச்சாரிய தீபம்
செஞ்சொல் கொண்டல் கவிஞர்

**விஸ்வபிரம்மஸ்ரீ வை. இ. எஸ். காந்தன் குருக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்வாழ்த்துக்கள் !

**கார்த்தி ஜுவலர்ஸ்**

46, கன்னூரத் தெரு,
கொழும்பு - 13.

தொலைபேசி: 541067

எமது இதயபூர்வமான நல்வாழ்த்துக்கள்

**ராம் பிரதர்ஸ்**

140, மெயின் வீதி,
கொழும்பு 11.

தொலைபேசி:
20127-547698

**K. தங்கையா ஆச்சாரி அன் சன்ஸ்**

19, புதுச்செட்டித் தெரு,
கொழும்பு 13.

தொலைபேசி:
35124

நல்லாசிகளுடன்

**சுஜாதா ஜுவலர்ஸ்**

109, செட்டியார் தெரு,
கொழும்பு 11.

**பிரபா ஜுவல்லரி**

106, கண்டி ரோடு,
நுவரெலியா.

தொலைபேசி
(052) 2919

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# - பொற்கொல்லன் -

ஏற்றப் பார்வையுடன், நிமிர்ந்த நெஞ்சுடன்
ராஜநடை போடும் உந்தன்
சிங்கார கைநர்த்தனத்தைக் கண்டு
வாணி விரும்பி தந்தாள் வித்தைகள்
பல உனக்கு உலோகங்களை
பல ஒன்றிணைக்க, ஒன்றிணைத்து
ஒப்பாருமிக்காருமில்லாது மாசு
மருவற்ற அற்புத உருவங்கள்
தந்திடுவாய் பாருக்குன்! என எண்ணி
ஆனால் சிருங்கார தேசத்தின்
மன்மதனை நீ ஏன்
திண்ணையிலே தூங்குகின்றாய்
அதிதீத கற்பனைகளில் ஓவியம்
வரையும் ஓவியன் நீ
ஆனந்த தாண்டவமாடும்
நடராஜன் என்ன?
கோபிஸ்திரிகளுடன் கோலம்
செய்யும் கண்ணன் என்ன?
எத்துனை உருவங்கள் இறை
எடுத்தாலும் அதில் பொன்னழகையும்
பெண்ணழகையும் சேர்க்காமல் விடலாமா?
ஆதலால்தான் பொன்னழகைச் சேர்க்க
இறைவன் உனக்கு தந்தானே
வித்தைகள் பல உனக்கும்
உன் சந்ததியாருக்கும்
அதை நீ உணரும் காலம்
வெகு தொலைவிலில்லை.

- ப்ரிய நேசன்

உதயகுமார் தங்கம் ஆச்சாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க நடவடிக்கைகள்

நம் சமூகத்தவரிடையே சமய வளர்ச்சி ஏற்படவேண்டும் என்ற உயரிய நோக்கோடு கடந்த ஜுலை மாதம் 4ம் திகதி முதல், இருவாரங்களுக்கொருமுறை வெள்ளிக்கிழமைகளில் மாலை 7 மணி முதல் 8 மணி வரை பூஜை, கூட்டுப்பிரார்த்தனை பஜனை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்று வருவதை அனைவரும் அறிவீர்கள். இதுவரை 21 நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளோம். இதில் 18 நிகழ்ச்சிகளை செயற்குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவராக தங்களது சொந்த செலவில் உபயமாக ஏற்று நடத்தித் தந்துள்ளார்கள். விருப்பமுள்ள நம் சமூகத்தவர் எவரேனும் விரும்பினால் பஜனை நிகழ்ச்சிகளை உபயமாக ஏற்று நடத்தலாம் என்று நாம் அறிவித்ததற்கிணங்க முன்னாள் உபதலைவரும் கௌரவ அங்கத்தவருமான திரு. க. தங்கையா ஆச்சாரி அவர்களும், கொழும்பு இமேஜஸ் மார்கட்டிங் சர்விஸஸ் ஸ்தாபனத்தாரும், கொழும்பு செட்டியார் தெரு, 192ம் இலக்கத்தில் தொழில் புரியும் விஸ்வகர்ம இளைஞர்களும், கன்னாரத் தெரு நகைத் தொழிலாளர்களும் பஜனை நிகழ்ச்சிகளை உபயமாக சிறப்பாக நடத்தித் தந்துள்ளார்கள். அவர்களுக்கு எமது உளம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

27.3.87 அன்று நடைபெற்ற பஜனையை இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் ஒலிப்பதிவு செய்து 14.4.87ம் திகதி தமிழ் புத்தாண்டன்று இரவு ஒலிபரப்பியது. இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன தமிழ் நிகழ்ச்சி கட்டுப்பாட்டதிகாரி திருமதி நவராஜகுலம் முத்துக்குமாரசாமி அவர்களுக்கும், தயாரிப்பாளர் செல்வி கமலா சதாசிவம் அவர்களுக்கும், தொழில்நுட்ப கலைஞர்களுக்கும் எமது நன்றி.

கூடிய விரைவில் பெண்கள் பங்குபற்ற கூடியதான ''திருவிளக்கு பூஜை'' நடத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இந்த ஏற்பாடுகள் பூர்த்தியானதும் கன்னிப்பெண்களும், சுமங்கலிப்பெண்களும் கலந்து சிறப்பாக பூஜை நடத்தலாம்.

''சமையல் கலை'' போதனை வகுப்புகளையும் நடத்த தீர்மானித்துள்ளோம். இதில் ஆர்வமுள்ள பெண்கள் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

6.5.87 அன்று செயற்குழு அங்கத்தவர் சிலர், புதிய அங்கத்தவர்களைச் சங்கத்தில் சேரும்படி அழைக்க சென்றபொழுது, பலர் புதிய அங்கத்தவர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். இன்னும் நம் சமூகத்துப் பெண்களில் சிலர் அங்கத்தவர்களாக சேராதிருந்தால் உடனடியாக விண்ணப்பப்பத்திரம் பெற்று, அங்கத்தவர்களாகும்படி வேண்டிக் கொள்கிறோம்.

இதுவரை 1 வருடாந்தக் கூட்டம் 14 செயற்குழு கூட்டங்களும், 1 பொதுக் கூட்டமும், நடைபெற்றுள்ளன. மே 31ம் திகதி மற்றுமொரு பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. வருடாந்த பொது கூட்டம் ஜூன் 28ம் திகதி நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தின் போது 1987/88 க்கான காரியநிர்வாக சபை தெரிவு செய்யப்படும்.

**த. பாலசுப்பிரமணியம்**
கௌரவ இணைக்காரியதரிசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதாரண அங்கத்தவர் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 0- 1 | திரு. I. மகேந்திரன் | 0-47 | திரு. M. K. ராஜரட்னம் |
| 0- 2 | ,, R. சோமசுந்தரம் | 0-48 | ,, T. சிவநாதன் |
| 0- 3 | ,, I. ஜீவானந்தன் | 0-49 | ,, K. கணேசன் |
| 0- 4 | ,, I ராஜேந்திரன் | 0-50 | ,, A. சிதம்பரம் |
| 0- 5 | ,, V. R. ஐயாத்துரை ஆச்சாரி | 0-51 | ,, M. குணசேகரன் |
| 0- 6 | ,, R. கிருஷ்ணகுமார் | 0-52 | ,, R. ராமச்சந்திரன் |
| 0- 7 | ,, P. கமலநாதன் | 0-53 | ,, S. சுப்பையா |
| 0- 8 | ,, M. குணசீலன் | 0-54 | ,, R. சோமசுந்தரம் |
| 0- 9 | ,, C. அமரசூரியன் | 0-55 | ,, R. வரதராஜா |
| 0-10 | ,, S. பத்மநாதன் | 0-56 | ,, N. சரவணமுத்து |
| 0-11 | ,, K. சண்முகநாதன் | 0-57 | ,, M. கணேசன் |
| 0-12 | ,, S. கணபதி | 0-58 | ,, D. சத்தியமூர்த்தி |
| 0-13 | ,, A. ரவிசந்திரன் | 0-59 | ,, V. கனகராஜ் |
| 0-14 | ,, S. தியாகராஜா | 0-60 | ,, S. ஜகதீஸ்வரன் |
| 0-15 | ,, P. முத்துகுமாரு | 0-61 | ,, S. சீதாராம் |
| 0-16 | ,, P. T. பாலகிருஸ்ணன் | 0-62 | ,, K. சிவராமகிருஷ்ணன் |
| 0-17 | ,, R. சுப்பையா | 0-63 | ,, K. சேகர் |
| 0-18 | ,, R. திருச்செல்வம் | 0-64 | ,, S. சிவராமகிருஷ்ணன் |
| 0-19 | ,, S. ராமையா | 0-65 | ,, S. மனோகரன் |
| 0-20 | ,, M. தியாகராஜா | 0-66 | ,, S. விஜயகுமார் |
| 0-21 | ,, M. சண்முகநாதன் | 0-67 | ,, R. ஸ்ரீ காந்தன் |
| 0-22 | ,, M. பாக்கியநாதன் | 0-68 | ,, S. பிரேமானந் |
| 0-23 | ,, S. ஆரியபுத்திரன் | 0-69 | ,, S. கிருஷ்ணகுமார் |
| 0-24 | ,, M. சிவராஜா | 0-70 | ,, S. பிரபாகரன் |
| 0-25 | ,, D. சண்முகராஜா | 0-71 | ,, I. தங்கராஜா |
| 0-26 | ,, S. ராசையா | 0-72 | ,, S. சிவராமன் |
| 0-27 | ,, S. செல்லப்பா | 0-73 | ,, M. சதாசிவம் |
| 0-28 | ,, S. சண்முகராஜா | 0-74 | ,, M மகேஸ்வரன் |
| 0-29 | ,, N. ஜெயகுமார் | 0-75 | ,, N. துரைராஜா |
| 0-30 | ,, S. கதிரவேல் | 0-76 | ,, V. நாகலிங்கம் |
| 0-31 | ,, S. கதிரேசன் | 0-77 | ,, N தியாகராஜா |
| 0-32 | ,, S. ஆறுமுகம் நைனர் | 0-78 | ,, K. ராஜகோபால் |
| 0-33 | ,, S. பாலசந்திரன் | 0-79 | ,, S. செல்லப்பா |
| 0-34 | ,, S. சேகர் | 0-80 | ,, S. ராமசந்திரன் |
| 0-35 | ,, V. கணேசன் | 0-81 | ,, M. சிவசக்திவேல் |
| 0-36 | ,, S. கதிர்வேல் | 0-82 | ,, S. சக்திவேல் |
| 0-37 | ,, V. சுப்பையா | 0-83 | ,, K. சுப்பையா |
| 0-38 | ,, S. கதிர்வேல் | 0-84 | ,, S. முத்துசாமி |
| 0-39 | ,, S. கருணாநிதி | 0-85 | ,, K. பன்னீர்செல்வம் |
| 0-40 | ,, R. நடராஜா | 0-86 | ,, M. நடராஜா |
| 0-41 | ,, R. M. சுந்தரம் | 0-87 | ,, A. கணபதி |
| 0-42 | ,, V. C. ராமசாமி ஆச்சாரி | 0-88 | ,, N. சங்கரலிங்கம் |
| 0-43 | ,, R. நாகராஜன் | 0-89 | ,, V. பரமசிவம் |
| 0-44 | ,, P. ராஜகோபால் | 0-90 | ,, T. ராஜகோபால் |
| 0-45 | ,, N. மகாராஜன் | 0-91 | ,, T. ராமசாமி |
| 0-46 | ,, I. கேசவன் ஆச்சாரி | 0-92 | திரு. S. செல்வராஜா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 0-93 | திரு. | P. ராமசாமி |
| 0-94 | ,, | N. சந்திரசேகரம் |
| 0-95 | ,, | S. சண்முகராஜா |
| 0-96 | ,, | P சொக்கலிங்கம் |
| 9-97 | ,, | K. ஹரிபாஸ்கரன் |
| 0-98 | ,, | T பஞ்சலிங்கம் |
| 0·99 | ,, | P. ஜெயபிரகாசம் |
| 0-100 | ,, | P. ஜெயகுமார் |
| 0-101 | ,, | P. பட்டக்கண்ணு |
| 0-102 | ,, | R. தியாகராஜா |
| 0-103 | ,, | R. சபர்ரட்ணம் |
| 0-104 | ,, | S முனீஸ்வரன் |
| 0-105 | ,, | D. ஸ்கந்தராஜா |
| 0-106 | ,, | N. முத்துலிங்கம் |
| 0-107 | ,, | T. நமசிவாயம் |
| 0-108 | ,, | P. சண்முகம் |
| 0-109 | ,, | S. நடராஜா |
| 0-110 | ,, | K. கேசவமூர்த்தி |
| 0-111 | ,, | K. தியாகராஜா |
| 0-112 | ,, | V. வீரசிங்கம் |
| 0-113 | ,, | S. ராஜலிங்கம் |
| 0 114 | ,, | R. திருச்செல்வம் |
| 0-115 | ,, | S. சிவராமன் |
| 0-116 | ,, | S. ராமச்சந்திரன் ஆச்சாரி |
| 0-117 | ,, | V. மகாதேவன் |
| 0-118 | ,, | P. செல்வராஜன் |
| 0 119 | ,, | N. சந்திரமோகன் |
| 0-120 | ,, | N. தங்கராஜன் |
| 0-121 | ,, | V. சோமசேகரம் |
| 0-122 | ,, | V. தில்லைநாதன் |
| 0-123 | ,, | S. சித்ரவேல் |
| 0-124 | ,, | S. கிருஷ்ணபிள்ளை |
| 0-125 | ,, | T. பாலசந்திரன் |
| 0-126 | ,, | R. மோகனசந்திரன் |
| 0-127 | ,, | S. பிரபாகர் |
| 0-128 | ,, | C. சுகுமார் |
| 0-129 | ,, | A. C. வடிவேல் |
| 0-130 | ,, | M. குமாரவேல் |
| 0-131 | ,, | S. அசோகன் |
| 0-132 | ,, | S. ஜீவரட்னம் |
| 0-133 | ,, | S. சந்திரசேகர் |
| 0-134 | ,, | R. ராஜேந்திரம் |
| 0-135 | , | R. அன்பரசன் |
| 0-136 | ,, | K. ராமலிங்கம் |
| 0-137 | ,, | P. ராஜேந்திரம் |
| 0-138 | ,, | S செல்வராஜ் |
| 0-139 | ,, | S. கணேசன் |
| 0-140 | ,, | K. விநாயகமூர்த்தி |
| 0-141 | ,, | S. கந்தசாமி |
| 0-142 | ,, | S வாசுதேவன் |
| 0-143 | ,, | L சந்திரசேகரம் |
| 0-144 | ,, | S சோமசுந்தரம் |
| 0-145 | ,, | S. ஹரிரட்னா |
| 0-146 | ,, | S. ஜயசிலன் |
| 0-147 | திரு. | K. ராஜலிங்கம் |
| 0-148 | ,, | M. சண்முகநாதன் |
| 0-149 | ,, | A. லோகநாதன் |
| 0-150 | ., | P. சண்முகராஜா |
| 0-151 | ,, | K. சண்முகராஜா |
| 0-152 | ,, | S. P. சண்முகம் |
| 0-153 | ,, | K. ராஜசேகர் |
| 0-154 | ,, | K. ஜெயசீலன் |
| 0-155 | ,, | P. பிரபாகரன் |
| 0-156 | ,, | N. அரியரட்னம் |
| 0-157 | ,, | S. கனகரட்னம் |
| 0-158 | ,, | K. சுப்பையா |
| 0-159 | ,, | K. ராசு |
| 0-160 | ,, | N. ராஜகோபாலன் |
| 0-161 | ,, | M. ராஜசேகர் |
| 0-162 | திருமதி | S. ராஜகோபாலன் |
| 0-163 | ,, | V. சாந்திகுமார் |
| 0-164 | திரு. | R. லோகேஸ்வரன் |
| 0-165 | ,, | T. தேவகுமார் |
| 0-166 | ,, | M. மகாலிங்கம் ஆச்சாரி |
| 0-167 | ,, | K. கோவிந்தசாமி |
| 0-168 | ,, | S. ராதாகிருஷ்ணன் |
| 0-169 | ,, | S. ஞானகுமார் |
| 0-170 | ,, | P. ராமசாமி ஆச்சாரி |
| 0-171 | ,, | M. சதாசிவம் |
| 0-172 | ,, | T. ராமசாமி |
| 0-173 | ,, | P. தியாகராஜா |
| 0-174 | ,, | P. கோவிந்தராஜன் |
| 0-175 | ,, | M. பாலசுப்ரமணியம் |
| 0-176 | ,, | K. சுப்ரமணியம் |
| 0-177 | ,, | L. வரதராஜா |
| 0-178 | ,, | P. சந்தானகிருஷ்ணன் |
| 0-179 | ,, | A. பாலசுப்ரமணியம் |
| 0-180 | ,, | S கதிரவேல் |
| 0-181 | ,, | T. ஜயகுமார் |
| 0-182 | ,, | T. பாலசந்திரன் |
| 0-183 | ,, | M. சுப்ரமணியம் |
| 0-184 | ., | T. பேரின்பம் |
| 0-185 | ,, | S. முத்துராமலிங்கம் |
| 0-186 | ,, | K. S. ராஜரட்னம் |
| 0-187 | ,, | R. K. ஆறுமுகம் |
| 0-188 | ,, | S. சிவானந்தன் |
| 0-189 | ,, | K. பிரேமானந் |
| 0-190 | திருமதி | R. சக்திவேல் |
| 0-191 | திரு. | T. உதயகுமார் |
| 0-192 | ,, | S. பாலகிருஷ்ணன் |
| 0-193 | ,, | S. ஈஸ்வரமூர்த்தி |
| 0-194 | ,, | M. P. பாலசுப்ரமணியம் |
| 0-195 | ,, | M. மாரிமுத்து |
| 0-196 | ,, | M. பேச்சிமுத்து |
| 0-197 | ,, | A. திருமால்சாமி |
| 0-198 | ,, | M. சண்முகநாதன் |
| 0-199 | ,, | T. விஸ்வநாதன் |
| 0-200 | திருமதி | S. விஸ்வநாதன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருக்கோயில் வழிபாட்டு முறை

கோவிலுக்குச் செல்லுமுன் உடலையும் உள்ளத்தையும் சுத்தமாகக் கொண்டுச் செல்லவும்.

திருக்கோவிலுக்குள் நுழைவதற்கு முன்னதாகக் கண்ணில் தெரிவது கோபுரம் அதனை தெய்வவடிவமாக எண்ணி வணங்கிவிட்டு கோயிலுக்குள் நுழைய வேண்டும். உள்ளே முதலில் பலிபீடம் காணப்படும். அதனருகில் விழுந்து வணங்க வேண்டும். அடுத்து இருப்பது கொடிக்கம்பம், கொடிக்கம்பத்திற்கு அடுத்தாற்போல் இருப்பது மூலஸ்தானத்திலுள்ள மூர்த்தியின் வாகனம். அவற்றை வழிபட்டு பின்பு முறையே விநாயகர், சுப்ரமணியர், சிவபெருமான், அம்பிகை, துர்க்கை, தக்ஷிணாமூர்த்தி, சண்டேசுவரர், வைரவர் ஆகியோரை வணங்கவும். கடைசியாக நவக்கிரகங்களை மும்முறையாவது வலம் வருதல் வேண்டும். அடுத்து உட்பிரகாரத்தை வலம்வந்து, மீண்டும் கொடிக்கம்பத்தருகே நமஸ்காரம் பண்ணி சிறிதுநேரம் ஓரிடத்தில் அமர்ந்திருந்து வரவேண்டும்.

ஆண்கள் அஷ்டாங்கமாகவும் பெண்கள் பஞ்சாங்கமாகவும் நமஸ்காரம் பண்ணுவதே முறை. விநாயகர் முன்னால் மட்டுமே தலையைக்குட்டித் தோப்புக்கரணம் போடுவது வழக்கம். சுவாமியைப் பார்க்கச் செல்லும்போது வெறுங்கையுடன் போகக் கூடாது. மூலஸ்தானத்துக்கும் பலிபீடத்துக்கும் குறுக்கே போகக்கூடாது.



## பதினாறு பேறுகள்

1. புகழ்
2. கல்வி
3. வலிமை
4. வெற்றி
5. நன்மக்கள்
6. பொன்
7. நெல்
8. நல்லூழ்
9. நுகர்ச்சி
10. அறிவு
11. அழகு
12. பொறுமை
13. இளமை
14. துணிவு
15. நோயின்மை
16. வாழ்நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படித்தால் மட்டும் போதுமா ?

கற்றவர்கள் எல்லாம் அறிவாளிகளும் அல்ல; கல்லாதவர்கள் எல்லாம் அறிவற்ற வர்களும் அல்ல. கற்றவர்களில் பலர் பண்பில்லாமல் நடப்பதைக் காண்கின்ரேம். அதே சமயம் கல்லாதவர்கள் எத்தனையோபேர் பண்பில் சிறந்து விளங்குவதைக் காண்கின்ரேம். படித்தவர்கள் எத்தனையோபேர் பண்பற்றமுறையில் பேசுவதாலும், செயல்படுவதாலும் சமுதாயத்தில் வெறுக்கப்படுகின்ருர்கள்.

நாம்தான் அறிவாளிகள்; நாம்தான் எல்லாம் தெரிந்தவர்கள் என்ற எண்ணத்தில் அல்லது மற்றவர்கள் நம்மை பெரிதாக மதிக்கவேண்டும் என்பதற்காக பொருளற்று பிறர் மனம் நோகும்படியாக கதைப்பது பண்பாடற்ற செயல், படித்தால் மட்டும் போதாது பண்போடு பேசவேண்டும். படித்தவர் - படிக்காதவர், ஏழை - பணக்காரன் என்ற பேத மின்றி பண்போடு படிக்கவேண்டும்; பேசவேண்டும். அரசியல், சமூகசேவை, பொதுசேவை போன்றவற்றில் ஈடுபடுபவர்களுக்கு இது மிக அவசியம்.

பொறுமையுடனும், மற்றவர்களையும் மற்றவர்களின் கருத்தையும் மதித்து நடப் பதே பண்பு கல்வியின் பயன் - அறிவு; அறிவின் பயன் - பகுத்தறிவு; பகுத்தறிவின் பயன் - பண்பு; பண்பின் பயன் - மனிதன் மனிதனுக வாழ்வதும், மனிதனை மனிதனுக மதிப்பதுமே.

நன்மை செய்வதற்கு அறிவு எங்ஙனம் பயன்படுகின்றதோ அங்ஙனமே தீமை செய்வதற்கும் அதே அறிவு பயன்படுகின்றது. ஆகவே அறிவை நல்லவைகளுக்காகப் பயன் படுத்தவும். பிறர் மனதை துன்புறுத்தாமலும் இருக்க பண்பை வளர்க்கவேண்டும். நமது பண்பற்ற பேச்சால் நல்லவர்கள் மனம் புண்படுவதால் பல கஷ்டங்களையும் நஷ்டங்களை யும் எதிர்நோக்க நேரிடும். சிலரின் பேச்சால் பொதுசேவை செய்பவர்களின் மனமுடைந்து இதிலிருந்து ஒதுங்கிக்கொள்வோரும் உண்டு. இதனுல் சமுதாயத்திற்கு கிடைக்கவேண்டிய நல்ல சேவைகளை இழக்க நேரிடுகின்றது. மனம் சோர்வடைந்துவிடுகின்றது. ஆகவே பகுத் தறிவின் துணைகொண்டு நன்மை தீமைகளை ஆராய்ந்து நன்மையின்பால் அறிவாற்றலைச் செலுத்தவேண்டும், உலகம் உய்யவேண்டும். மக்கள் மக்களாக வாழவேண்டுமாயின் நிச்சயம் அன்பு, அடக்கம், பண்பு முக்கியம் படிப்பு மட்டும் போதாது கத்தி கூர்மையாக இருக்க வேண்டும். ஆனுல் அக்கூர்மை கழுத்தை அறுக்கப் பயன்படக்கூடாது. இனிய கனியை அரிந்துண்ண பயன்படவேண்டும் அறிவும் அவ்வண்ணமே அறிவு ஒரு கத்தி கல்வி அதனைத் தீட்டிக்கொடுக்கும் சாணைக்கல் அங்ஙனம் தீட்டப்படும் அறிவு நல்ல வழியில் பண்பான முறையில் பயன்படுத்த வேண்டும் கர்வம் குறைந்து பண்பு வளரவேண்டும். நான் என்ற அகங்காரம் குறையவேண்டும்.

மனிதன் அறிவு என்னும் மாண்புறு புலனைப்பெற்றவன். அப்புலன் பிறருடைய. இன்னலில் துன்பம் காண்பதற்காக ஏற்பட்டதல்ல, அதன் துணைக்கொண்டு பிறர் நிலையில் தன்னை வைத்துப் பார்க்கும் பகுத்தறிவு பெற்றிடவேண்டும். நன்மை - தீமை, நல்லவர் - கெட்டவர் என்ற பாகுபாடு காணவேண்டும். பிறர் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கவும், ஏற்ற தாழ்வு பார்த்திடாமல் எல்லோரையும் சமத்துவமாக மதிக்கும் பண்பாடு எற்படவேண்டும்

முடிந்தால் நன்மை செய்யவேண்டும் முடியாவிட்டால் நன்மை செய்பவர்களுக்கு இடைஞ்சலாக இருக்காமலாவது உதவியாக இருக்கவேண்டும். அறிவினுல் பண்பையும் அன்பையும் வளர்க்கவேண்டும். இதைத்தான் வள்ளுவர் அறிவினுல் ஆகும் பயன் என்கிருர். எனவே கற்றதனுல் ஆன பயன் தூய அறிவுடையவராக வாழ்தலும் நல்ல செயல் உடைய வராகத் திகழ்தலுமே அறிவுடையோரின் மாண்பாகும்.

**S. செல்வரட்னம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஸ்வகுல ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக்கும் எமது வாழ்த்துக்கள்

**பழமுத்து முத்துக்கருப்பன் செட்டியார் நகைமாளிகை**

36, செட்டியார் தெரு, தொலைபேசி
கொழும்பு 11. 28478-25820

நல்லாசிகளுடன்

**சுரேஷ் வீடியோ விஷன்**

180, வூட்டன் பஜார்,
கொட்டகலை.

**நித்தியகல்யாணி ஜுவலர்ஸ்**

40, செட்டியார் தெரு, தொலைபேசி
கொழும்பு 11. 21617/22014

**ரோயல் டெக்ஸ்டைல்ஸ்**

237, மெயின் வீதி,
கொழும்பு 11. தொலைபேசி: 549944

விஸ்வகர்மாக்கள் வாழ்க ! வளர்க !

**பட்டிக்கண்ணு சுப்பையா ஆச்சாரி அன் சன்ஸ்**

தொலைபேசி: 102, புதுச்செட்டித் தெரு,
22304/23818 கொழும்பு 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி செலுத்துகின்றேம்

எம்மிடையே வாழ்ந்து மறைந்த எமது சங்க உறுப்பினர்களான

திருவாளர்கள் தா. சிவதானு ஆச்சாரி
லெ. சிவலிங்கம் ஆச்சாரி
ச. சண்முகராஜா ஆச்சாரி அவர்களுக்கும்

எமது இனத்தவர்களான

திரு. க. சுந்தரம் ஆச்சாரி
திரு. ப. ஈனமுத்து ஆச்சாரி அவர்களுக்கும்

**எமது அஞ்சலியைச் செலுத்துகின்றேம்.**

**சாதாரண அங்கத்தினர்கள் கவனத்திற்கு**

*1987/88* க்கான சந்தா தொகை ரூபா *100/-* ஐக் இது வரை செலுத்தாதவர்கள், தாமதமின்றிச் செலுத்தி, எம்மோடு ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேம்.

பொருளாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ முத்துமீனாட்சி ஜுவல்லரி
152 B, செட்டியார் தெரு,
கொழும்பு 11.
தொலைபேசி: 33164 / 29104

இணை நிர்வனங்கள்
செல்வன் ட்ராவல்ஸ் & டுவர்ஸ்
திருமதி A. அழகுராசா
(அடகு வியாபாரம்)

நமது சமுதாயம் முன்னேற எமது நல்வாழ்த்துக்கள்

மாலா ஜுவலரி ஹவுஸ்
100, செட்டியார் தெரு,
கொழும்பு 11.
தொலைபேசி
25287

சுபானி ஜுவல்ஸ்
96, செட்டியார் தெரு,
கொழும்பு 11.

A. கணபதி ஆச்சாரி
57, கன்னாரத் தெரு,
கொழும்பு - 13.

நல்வாழ்த்துக்களுடன்

சுயிஸ் ஜுவலர்ஸ்
192, செட்டியார் தெரு,
கொழும்பு 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 14-12-86 அன்று இலங்கை விஸ்வகர்ம சங்கத்தின் வேண்டுகோளுக் கிணங்க, முழுமனதுடன் வந்து தானங்களிலேயே சிறந்த கண் தானம், இரத்ததானம் வழங்கியவர்களுக்கு சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இரத்ததானம் வழங்கிய சங்க அங்கத்தவர்கள்:-**

1. திருமதி M. தியாகராஜா
2. திரு. T. நமசிவாயம்
3. ,, S. சுப்பையா
4. ,, K. N. சாந்திகுமார்
5. ,, P. பட்டக்கண்ணு
6. ,, M. தியாகராஜா
7. ,, P. சந்திரசேகர்
8. திருமதி S. ராஜகோபாலன்
9. திரு. R. செல்வம்
10. ,, N. மகேஸ்வரன்
11. ,, B. சந்திரசேகர்
12. திருமதி K. ஸ்கந்தராஜா
13. திரு. K. சற்குருநாதன்
14. ,, M. பாக்கியநாதன்
15. ,, M. கணேசன்
16. ,, N. சுந்தரமூர்த்தி
17. ,, S. பிரபாகர்
18. ,, கதிர்வேல் பாலா
19. ,, S. ஸ்ரீதரன்
20. ,, K. ராஜலிங்கம்
21. ,, K. ராஜரட்னம்
22. ,, K. சேகர்
23. ,, P. கமலநாதன்

**இரத்ததானம் வழங்கிய அங்கத்தவர் அல்லாதவர்கள்:-**

1. திரு. C. சந்திரகுமார்
2. ,, A. குருமூர்த்தி
3. திருமதி சந்திரசேகரம்
4. திரு. E. E. சர்வானந்தா
5. ,, S. வைத்தியநாதன்
6. ,, `. கனகரட்னம்
7. ,, S. செல்வராஜா
8. ,, M. R. பெர்ணன்டோ
9. ,, P. சுப்பையா
10. ,, F. மொராய்ஸ்
11. திருமதி B. M. மகேந்திரநாதன்
12. திரு. N. ஸ்ரீதரன்
13. ,, S. செல்வராஜா
14 ,, V. சிவரட்னம்
15. ,, A. N. பெர்ணன்டோ
16. ,, V. கமலநாதன்
17. ,, S. முனீஸ்வரன்
18. ,, M. அஜாருடீன்
19. ,, K. கிருஷ்ணன்
20. ,. R. அருட்செல்வம்
21, ,, T. கணேசன்
22. ,, M. சபாபதி
23. ,, K. மனோகரன்

**கண்தானம் வழங்கிய அங்கத்தவர் பட்டியல் வருமாறு :-**

1. திரு. M. சுப்பையா
2. ,, S. ராமசந்திரன்
3. ,, S. செல்வரட்னம்
4. ,, T. பாலசுப்ரமணியம்
5. திருமதி G. பாலசுப்ரமணியம்
6. திரு. S. விஸ்வநாதன்
7. ,, A. கணபதி
8. ,, K. N. சாந்திகுமார்
9. திருமதி V: சாந்திகுமார்
10. திரு. T. நமசிவாயம்
11. திருமதி P. நமசிவாயம்
12. திரு. N ராஜகோபாலன்
13. திருமதி S. ராஜகோபாலன்
14. திருமதி P. சண்முகநாதன்
15. செல்வி G. சண்முகநாதன்
16. ,, V. நடேசன்
17. திருமதி P. விவேகானந்தன்
18. ,, K. ஸ்கந்தராஜா
19. செல்வி K. நடராஜன்
20. திரு. N. ஜெயகுமார்
21. ,, S. சத்திவேல்
22. ,, S. முத்துலிங்கம்
23. ,, S. ராஜலிங்கம்
24. ,, S. சிவானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்தானம் வழங்கிய அங்கத்தவர் பட்டியல் வருமாறு:-**

25. திரு. M. சிவராஜா
26. ,, M. சண்முகநாதன்
27. ,, M. பாக்கியநாதன்
28. ,, P. பட்டக்கண்ணு
29. ,, N. துரைராஜா
30. ,, M. தியாகராஜா
31. ,, S. தியாகராஜா
32. ,, K. பிரேம்நாத்
33. ,, S பாலகிருஷ்ணன்
34. ,, S. முனீஸ்வரன்
35. ,, N. சுந்தரமூர்த்தி
36. ,, P. பாலசுப்ரமணியம்
37. ,, V. கண்ணப்பா
38. ,, E. கதிர்வேல்
39. ,, M. கணேசன்
40. திருமதி D. பூராஜா
41. திரு. N. மகேஸ்வரன்
42. திரு. R. செல்வம்
43. ,, M. மகேஸ்வரன்
44. ,, D. சண்முகராஜா
45. செல்வி K. ஜெயந்தி
46. திரு. S. கணேசன்
47. திருமதி S விஜயலக்ஷ்மி
48. திரு. P. சொக்கலிங்கம்
49. ,, K. சண்முகராஜா
50. ,, K. ராஜரட்ணம்
51. ,, A. திருமலைசாமி
52. ,, M. சதாசிவம்
53. ,, S. சங்கரலிங்கம்
54. செல்வி K. அமராவதி
55. ,, K. சரோஜா
56. திரு. S. சந்திரசேகர்
57. ,, S. சுப்பையா
58. ,, K. விநாயகமூர்த்தி
59. ,, S. ராஜேந்திரம்

**கண்தானம் செய்தவர்கள் — அங்கத்தவர் அல்லாதவர்கள்**

1. திரு. P. V. ராமன்
2. ,, K. ராஜலிங்கம்
3. ,, M. சபாபதி
4. ,, S. கதிர்வேல்
5. ,, T. கணேசன்
6. ,, S. ரவி
7. ,, P. சுப்ரமணியம்
8. ,, K. மனோகரன்
9. ,, K. பரமசிவம்
10. ,, M. பத்மராஜ்
11. ,, S. செல்வராஜ்
12. ,, S. செல்வராஜ்
13. ,, K. ஆனந்தன்
14. ,, C. சந்திரகுமார்
15. ,, P. ரெங்கராஜ்
16. செல்வி J. பெர்ணான்டோ
17. திரு. A. J. பெர்ணான்டோ
18. ,, B. அலோசியஸ்
19. திரு. M. M. ஆலிவர்
20. ,, J. K. A. பெர்ணான்டோ
21. ,, D. P. இமானுவேல்
22. ,, F. M. பெர்ணான்டோ
23. ,, T. எட்வர்ட்க்டொஸ்டர்
24. ,, M. R. பெர்ணான்டோ
25. திருமதி L. பெர்ணான்டோ
26. திரு. M. S. பெர்ணான்டோ
27. ,, J. A. பாய்வா
28. ,, J. B. கென்னி
29. ,, A. N. பெர்ணான்டோ
30. ,, J. V. பெர்ணான்டோ
31. செல்வி S. செலினா
32. திரு. K. அன்டன்
33. ,, J. G. பெர்ணான்டோ
34. திருமதி P. S. விக்டோரியா
35. ,, P. D. J. குணவர்தன
36. திரு. M. S. ஜயரட்ன
37. ,, J. சிரிவர்தன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DFCC DEVELOPMENT FINANCE CORPORATION OF CEYLON
Post Box 1397, 73/5 Galle Road, Colombo 3, Sri Lanka.

Mr. S. Thiagarajah
President
Ceylon Viswakarma Sangam
102, New Chetty Street,
Colombo 13.

September 03 1986

Dear Sir,

With reference to your letter dated August 29, 1986, a brief description of the facilities provided by the Development Finance Corporation of Ceylon (DFCC) to prospective entrepreneurs is given below.

The basic objective of the DFCC is to provide private sector development projects which conform to the government's development priorities with appropriate financial as well as other support. Forms of such support including advice and assistance in formulating, planning and implementing all such projects, which would help realise their full potential. In keeping with this objective the range of assistance offered by the DFCC is as follows :

— Foreign and local currency project loans
— Equity financing
— Guaranteeing loans and underwriting equity
— Equipment financing and equipment leasing
— Medium term loans for permanent working capital
— Professional project appraisal
— Merchant banking and project consultancy services
— Insurance agency services

DFCC is prepared to consider any project brought before it within the areas of Industry, Agriculture and Commercial activity The above categorisation is interpreted with appropriate elasticity in order to accommodate promising projects which would boost the national economy. There are an assortment of clients, some of whom are new-comers to industry while others are experienced entrepreneurs, very often going in for expansion of existing projects or diversifying into new areas. There are also those entrepreneurs who face difficulties due to numerous reasons. All these clients are important to DFCC as they represent varying degrees of success in the world of business.

Each project will be judged for its viability and economic benefit by the DFCC staff by the use of financial assessments that benefit both the entrepreneur and financier. This will no doubt help a prospective entrepreneur to be successful in the implementation of his project as the key consideration in any project should be its viability and economic benefit After funds are granted DFFC will associate itself with the entrepreneur in a helpful capacity in the implementation of the project in order to ensure optimum results.

Yours faithfully,

M. R. Prelis
GENERAL MANAGER.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத்தில் பெண்களின் பங்கு

சமூகத்தில் பெண்களின் பங்கு எனும் பொழுது சமூகம் பெண்ணுக்கு அளிக்கும் பங்கையும், ஒரு பெண் தான் வகிக்கும் பங்கையும் எடுத்துக்கொள்ளலாம். இன்று சமுதாயம் பல நிலைகளிலும் முன்னணியில் சென்று கொண்டிருக்கிறது. காலம் மிக துரித மான மாற்றங்களை உண்டாக்கிச் செல்கின்றது. மக்களிடையே கல்வி வளர்ச்சி, விழிப் புணர்ச்சி, நாகரீகம் ஒருவரோடொருவர் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் என்பன நாம் பாராட்டவும், வியக்கவும் தக்க வகையில் மாற்றங்களைக் கொண்டு வரு கின்றன. இவையாவும் மக்களிடையே அறிவையும், சிந்திக்கும், ஆற்றலையும் முன்னைவிட தூண்டப்படுவதை எமக்குக் காட்டுகின்றன. ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்வில் தான் முன்னேற வேண்டும் என்ற உந்துதல் அதிகரித்துக்கொண்டு வருகிறது.

இன்றைய நிலையில் பெண்களும் கல்வி வளர்ச்சி மற்றும் எல்லாத் துறைகளிலும் முன்னேறி வருகின்றார்கள். அவர்களின் சுயவளர்ச்சி நமக்கு சந்தோஷத்தைத் தரக்கூடிய தாயிருக்கின்றது. மேலும் பெண்களின் சேவையும் மதிக்கப்படுகின்றது. எல்லாத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றுவதை நாம் காணக்கூடியதாயிருக்கின்றது. ஆனால் வெளியில் சென்று வேலைபார்க்கும் பெண்களின் நிலை – பொருளாதார ரீதியில் அவர்கள் கட்டாயம் உழைக்கவேண்டியிருக்கிறது. ஒரு சில குடும்பங்களில் பெண்களின் உழைப்பு நிர்பந்தப்படுகின்றது. இதை நாம் சமுதாய சீர்திருத்தமாகவோ வேறு பயனுள்ள சேவை யாகவோ கருத முடியாது. பெண்களின் சேவை ஒரு நல்ல சமுதாயம் உருவாக வழிவகுக்க உதவியாயிருக்க வேண்டும். ஒவ்வொரு பெண்ணும் தான் ஏதாவது வகையில் குடும்பத்துக்கு சமூகத்துக்கு பயனுடையவளாக வாழ விரும்பவேண்டும். ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே என்பார்கள் இதில் ஆவதுக்கானவற்றை பெண்கள் செய்யத்தயங்கக் கூடாது.

ஆனால் ஒருசில பெண்களின் நிலையைச் சிந்தித்துப்பார்த்தால் எல்லோருக்கும் வாய்ப்புகள் கிட்டுவது மிகக் குறைவாகவே இருக்கின்றது. இதனால் இவர்கள் புத்திசாலிகள் அல்ல என்று கூறிவிடமுடியாது. ஒருசிலரின் சாதூர்யமும், புத்திசாலித்தனமும் யாருக்குமே பயன்படாத வகையில் வீணாகின்றது. காரணம் அவர்களின் திறமையை அறிந்து அதனைத் தூண்டி உற்சாகப்படுத்தாததாலும் அவர்கள் தாங்களாகவே தங்கள் திறமையை வெளிக் கொண்டுவர சந்தர்ப்பம் இல்லாததும்தான். ஒருசில பெண்கள் தங்கள் பெற்றோருடன் இருக்கும்வரை அதாவது திருமணம் ஆகாதவரை, சிலர் வசதியின்மையாலும் சிலர் வீணான சமூக கட்டுப்பாடுகளினாலும் தங்கள் திறமைகளை மேம்படுத்த முடியாத நிலையில் இருக் கின்றார்கள். ஆனால் திருமணத்தின் பின் கணவன் ஏன் தன் மனைவியின் அறிவுத்திறனை, பயன்பாட்டினை வெளிக் கொணரக் கூடாது? வெளியில் சென்று வேலைக்குப் போவது மாத்திரம் பயன் தருவதில்லை. என்னென்ன வழிகளில் அவர்களின் திறமை மற்றவர்களுக்குப் பயன்படுமோ அதை அறிந்து, அதை உற்சாகப்படுத்தி வரவேற்க முன்வர வேண்டும். அப்படி பெண்களின் பங்கும், சேவையும் நல்ல வகையில் பயன்படுமாயின் சமுதாய முன்னற்றத்துக்கு பயனுடையதாயிருக்கும்.

திருமதி புவனேஸ்வரி சண்முகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படி செய்தீர்கள்? — வெஜிடபிள் கட்லட் வடை

காரட், உருளைக்கிழங்கு, பீன்ஸ், கோஸ், உரித்த பட்டாணி எல்லாமாக 400 கிராம்

| | |
|---|---|
| பச்சை மிளகாய் | 15 |
| இஞ்சி ஒரு துண்டு | |
| பெரிய வெங்காயம் | 1 |
| பூண்டு | 1 |
| முந்திரி பருப்பு | 50 கிராம் |
| கராம்பு | 1 கரண்டி |
| உப்பு | 2 கரண்டி |
| உழுந்து | 400 கிராம் |
| எண்ணெய் | 1 போத்தல் |

### செய்முறை

உழுத்தம் பருப்பை ஊறபோடவும். பூண்டைத்தோல் உரிக்கவும். வெங்காயத்தைத் தோல் நீக்கிப் பொடியாக வெட்டிக்கொள்ளவும் காய்களையும் சிறிதாக நறுக்கிக்கொள்ளவும் முந்திரியை பொடியாகக் கிள்ளிக்கொள்ளவும்.

உழுத்தம் பருப்பு ஒரு மணி நேரம் ஊறியதும், களைந்து வடிகட்டி ஆட்டுரலில் போட்டு, பச்சை மிளகாய், இஞ்சி, பூண்டு, கராம்பு, உப்பு முதலியனவையும் சேர்த்து கெட்டியாக அரைத்து எடுத்துக்கொள்ளவும். அதனுடன் முந்திரி, வெட்டின காய்கள், பட்டாணியும் சேர்த்து, பிசைந்து கொள்ளவும். நன்ருக எண்ணெய் காயும்போது வடை போல் தட்டி எண்ணெயில் போட்டு சிவக்க வெந்ததும் எடுத்து பரிமாறலாம்.

---

## தெரியாமலா சொன்னார்கள் :-

★ 1. செக்களவு பொன்னிருந்தாலும் செதுக்கியுண்டால் எத்தனை காலம் வரும்?


★ 2. பணக்காரன் பின்னும் பத்து பேர்; பைத்தியக்காரன் பின்னும் பத்துபேர்.

★ 3. ஓரக்கண்ணியைப் பழிக்கின்ருன், ஒற்றைக்கண்ணன்.

★ 4. கொல்லன் உலையிலே கொசுவுக்கென்ன வேலை?

★ 5. பெண்ணுக்குப் பொன்னிட்டுப் பார்; சுவருக்கு மணணிட்டுப் பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீட்டில் அடுத்துவரும் விசேஷத்து வீட்டை அலங்கரிக்க அழகான கோலம். உங்கள் கைவண்ணத்தைக் காட்டிப்பாருங்கள்.

---

மரியாதை கொடுக்க வேண்டிய மூன்று
— வயது, சமயம், சட்டம்

மெச்ச வேண்டிய மூன்று
— அறிவு, அழகு, ஆரோக்கியம்

பண்படுத்த வேண்டிய மூன்று
— கருணை, மகிழ்ச்சி, திருப்தி

கடைபிடிக்க வேண்டிய மூன்று
— சத்தியம், நட்பு, அன்பு

அடக்க வேண்டிய மூன்று
— நாக்கு, ஆவேசம், செயல்

தவிர்க்க வேண்டிய மூன்று
— சோம்பல், பொய்மை, துன்பம்

கவனிக்க வேண்டிய மூன்று
— சொல், நடத்தை, குணம்

நேசிக்க வேண்டிய மூன்று
— நாணயம், தூய்மை, உண்மை

விலக்க வேண்டிய மூன்று
— குடித்தல், புகைத்தல், சூதாடுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இலங்கை விஸ்வகர்ம சங்கத்தில் அங்கத்தவராகச் சேர விரும்புவோர் சங்கக் காரியதரிசியுடன் கடிதமூலம் விண்ணப்பித்துக்கொள்ளவும்.

அலுவலக விலாசம்:- கௌரவ காரியதரிசி
இலங்கை விஸ்வகர்ம சங்கம்,
102, புதுச்செட்டித் தெரு
கொழும்பு - 13.

2. 'விஸ்வஜோதி'யில் விளம்பரம் செய்ய விரும்புவோர் விபரங்களுக்கு சங்க பொருளாளருடன் தொடர்புகொள்ளவும்.

விலாசம்:- கௌரவ பொருளாளர்
இலங்கை விஸ்வகர்ம சங்கம்,
36, செட்டியார் தெரு,
கொழும்பு - 11.

3. தங்கள் ஆயுள், வாகன, கட்டிட காப்புறுதி தேவைகளுச்கு சங்க முகவரை, சங்க காரியதரிசி மூலமாகத் தொடர்புகொள்ளவும்.

விலாசம்:- கௌரவ காரியதரிசி
இலங்கை விஸ்வகர்ம சங்கம்,
140, மெயின் வீதி,
கொழும்பு - 11.

4. மாதமிரு பஜனை நிகழ்ச்சிகள் விவேகானந்த மேடு, கமலா மோடி பிரார்த்தனை மண்டபத்தில், மாலை 7 மணிமுதல் 8 மணிவரை நடைபெறும். அனைவரும் கலந்து ஆண்டவன் திருவருள் பெற அழைக்கப்படுகிறார்கள். பூஜையை உபயமாகச் செய்ய விரும்புவோர் சங்கக் காரியதரிசியுடன் தொடர்புகொள்ளவும்.

விலாசம்:- கௌரவ காரியதரிசி,
இலங்கை விஸ்வகர்ம சங்கம்,
140, மெயின் வீதி,
கொழும்பு - 11.

5. தங்கள் கதை, கட்டுரை, கவிதை முதலிய படைப்புக்களை விஸ்வஜோதியில் பிரசுரித்து அனைவருடனும் பகிர்ந்துகொள்ள விரும்புவோர் பத்திரிகை ஆசிரியருக்கு அனுப்பிவைக்கவும்,

விலாசம்:- விஸ்வஜோதி ஆசிரியர்,
இலங்கை விஸ்வகர்ம சங்கம்,
102, புதுச்செட்டித் தெரு
கொழும்பு - 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BOOK POST




Mr./Mrs. S. PIRABAGAR
153, NEW CHETTY STREET
COLOMBO 11

If undelivered, please return to :-

**CEYLON VISVAKARMA SANGAM**

102, NEW CHETTY STREET,

COLOMBO - 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org